## <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 179/2019</u>

நாள் 03.02.2026

DW3 – N.C.மகேந்திரன்

த/பெ – சின்னச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of February 2026)**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாரா 13–ல் 27–வது வரியில், 5–ம் பிரதிவாதி எப்போதும் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்தது கிடையாது என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். அதனால் நான் எப்போதும் தாவா சொத்தில் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. அதேபோல், நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் 16.07.2014–ம் தேதியில் சொத்தின் சுவாதீனத்தை எனக்கு ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் பாரா 2–ல் சொத்தில் நான் வாடகைக்கு இல்லை என்று சொல்லியுள்ளது தவறு என்றும், எம்.எம். கிளாத் சென்டர் என்ற கடையில் மட்டும் தான் 273 சதுர அடி அளவு கொண்ட இடத்தில் தான் நான் வாடகைக்கு இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பாலசுப்பிரமணியமும், மகாலிங்கமும் வாடகைக்கு இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருந்து வரும் சொத்தில் தான் பாலசுப்பிரமணியமும், மகாலிங்கமும் வாடகைக்கு இருந்தது வருகிறார்கள் என்றால் இல்லை.

2. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையரை கொண்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்யும் வகைக்கு நீதிமன்ற ஆணையர்

நியமனம் செய்தால் எனக்கு எவ்வித ஆட்சேணையும் இல்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் பாரா 3 முதல் 9 வரை கண்டுள்ள சங்கதிகள் யாவும் தாவாவின் படி உண்மையென்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் முதல் விசாரணை வாக்குமூலத்தில் பாரா 10,11 பாராக்களிலும் பெயரளவில் தான் வாதியின் வழக்கு மறுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதியின் தாயார் தெய்வகுஞ்சாரம் 02.11.2014–ம் தேதியில் இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் கடந்த 02.11.2014–ம் தேதியன்று வாதியின் தாயார் தெய்வகுஞ்சாரம் இறந்துவிட்டார் என்றும், தெய்வகுஞ்சாரத்தின் இறப்பிற்கு பிறகு வாதிக்கு வழக்கு சொத்தில் 1/3 பங்கும் அதேபோல், அவரது சகோதரர்களான சண்முகசுந்தரம் மற்றும் இந்த வழக்கின் 1–ம் பிரதிவாதி குமார் ஆகியோர்களுக்கும் வழக்கு சொத்தில் தலா 1/3 பங்கும் சித்தியுள்ளது என்பது மட்டுமே உண்மை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல், பிரமாண வாக்குமூலத்தில் பாரா 10–ல் எனது அப்பா 4–ம் பிரதிவாதியிடம் கடந்த 16.07.2014–ம் தேதியிட்ட கிரைய பத்திரத்திற்குண்டான கிரைய தொகையான ரூ.5,50,000/–ஐ நான் கொடுத்ததாக சொல்வதை காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா? என்றால் அவ்வாறு தனியாக எதுவும் எழுதி வாங்கவில்லை. நானும், எனது அப்பாவும் பெயரளவில் தான் 16.07.2014–ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தை ஏற்படுத்தி கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் அந்த தேதியிலிருந்து இன்றைய நாள் வரையில் சொத்தின் சுவாதீனத்தையும் என் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 11–ல்

மகாலிங்கமும், பாலசுப்பிரமணியமும் தாவா சொத்தில் என்னுடைய நேரிடியான கண்காணிப்பில் வாடகைக்கு விடப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. மேற்படி மகாலிங்கமும், பாலசுப்பிரமணியமும் வாதியின் கீழ் வாடகைதாரராக இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர்களுக்கிடையே ஏற்படுத்திக்கொண்ட வாடகை ஒப்பந்த பத்திரத்தையும் வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

3. தற்போதும், தாவா சொத்திற்குரிய மாத வாடகையை மகாலிங்கமும், பாலசுப்பிரமணியமும் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் தான் கொடுத்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நானும், எனது அப்பாவும் சேர்ந்து மகாலிங்கம் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரை 2019–ம் ஆண்டில் மிரட்டி வாடகையை எங்களிடம் தான் கொடுக்க வேண்டும் என்று கேட்ட போது தான் சொத்து சம்பந்தமாக எங்கள் பெயரில் மோசடியாக கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ள விபரமே வாதிக்கு தெரிய வந்தது. ரூ.20,000/–க்கு மேல் கொண்ட தொகையை வங்கி கணக்கு மூலமாக தான் செலுத்த வேண்டும் என்ற விதிமுறை உள்ள விபரம் எனக்கு தெரியுமா? என்றால் அது எனக்கு தெரியாது. எனது தகப்பனார் சொத்து சம்பந்தமாக 16.07.2014–க்கு முன்பாக கிரைய ஒப்பந்தம் ஏதேனும் ஏற்படுத்திக்கொடுத்து, பின்பு அதை ரத்து செய்தாரா? என்றால் பெரியசாமி என்பவருக்கு அக்ரிமெண்ட் எழுதி கொடுத்து ரத்து செய்துள்ளார். அதற்கு எவ்வளவு தொகை வாங்கியிருந்தார், எவ்வளவு தொகை திருப்பி கொடுத்து விட்டு ரத்து செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அது சம்பந்தப்பட்ட செல் ரசீது எனது அப்பா வைத்துள்ளாரா? என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனார் எனது பெயருக்கு கிரைய ஆவணம் எழுதி வைப்பதாக

அழைத்ததின் பேரில் தான் நான் சென்று கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வாதியிடமும், வாதியின் தாயார் மற்றும் அவரது சகோரர்கள் ஆகியோரிடம் எனது அப்பா போலியாக வாடகை ஒப்பந்த பத்திரம் என்று சொல்லி அழைத்துச் சென்று போலியாக ஒரு பவர் ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. அந்த பவர் ஆவணத்தின் அடிப்படையில் எனது அப்பா மற்ற நபர்களுக்கு பெயரளவிலான கிரைய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொடுத்தும் அதை பெயரளவில் ரத்து செய்து விட்டு எனது பெயரில் கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரில் ஏற்பட்ட 16.07.2014–ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் கண்ட தொகை எதுவும் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 8 ரசீது நாங்கள் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பணம் செலுத்தியதற்கான ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. அந்த ரசீதானது பொது அதிகார பத்திரம் ஏற்பட்ட தேதியான 15.02.2011–ம் தேதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால், பொது அதிகார ஆவணமும், செல் ரசீதும் எனது அப்பாவால் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் நடத்தி வரும் எம்.எம்.கிளாத் சென்டர் என்ற பெயரில் உள்ள கடைக்கு லைசென்ஸ் பெறுவதற்காக வாடகை ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி போலியான ஆவணங்களை எனது அப்பா ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் பாரா 13–ல் 15.02.2011–ம் தேதியில் வாதியும் அவரது தாயார் 1–ம் பிரதிவாதி மற்றும் சண்முகசுந்தரம் ஆகியோர்கள் பிரதி

பிரயோஜனம் பெற்றுக்கொண்டு விட்டதாக 4–ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த அசல் ரசீதினை நான் எனது தரப்பு ஆவணம் 2 ஆக தாக்கல் செய்துள்ளது போலியான ஆவணம் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் எங்களால் போலியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த 15.02.2011–ம் தேதியிட்ட ரசீது பி.வா.சா.15–ல் எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது என்ற விபரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், தொகை முழுவதும் செலுத்தப்பட்டு விட்டதாக சொல்லப்பட்டுள்ளது. பொது அதிகார ஆவணம் ஏற்பட்டதாக சொல்லும் தேதியில் சொத்தை எனது அப்பா யாருக்கேனும் கிரையம் கொடுத்தாரா? என்றால் இல்லை. அதனால் பொது அதிகார ஆவணத்தின்பேரில் சொத்தை அன்றைய தேதியிலேயே கிரையம் எதுவும் கொடுக்கப்படாத நிலையில் அதே தேதியில் செல் ரசீது எழுதி கொடுக்க வேண்டிய அவசியம எதுவும் இல்லை என்றும், ஆனால் மோசடியாக எனது அப்பா செல் ரசீதை ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. எனது அப்பா எனது பெயருக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணத்தை வைத்து கொண்டு சொத்தின் சுவாதீனம் என் வசம் இருப்பதாக சொல்லி சொத்தின் மீது வங்கியில் அடமான கடன் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொத்தின் சுவாதீனத்திலேயே இல்லாத நிலையில் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்லி பொய்யாக அடமான கடன் பெற்றுள்ளது சட்டப்படியான குற்றம் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. வாதிக்கு நினைவு வந்த காலத்தில் தான் உரிய காலத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எனது பெயரில் பெயரளவில் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஆவணத்தின் பேரில் தாவா சொத்தை

பொறுத்து எனது பெயரில் ஏற்படுத்திக்கொண்ட பட்டா, சிட்டா, ரசீது, அடமான கடன்கள் ஏற்படுத்திய ஆவணங்கள் போலியானது என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணங்கள் இந்த வழக்கிற்கு பின்னிட்டு என்னால் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனால் வாதி தாவாவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**(1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.02.03 15:16:27 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**